ஹொகேனக்கல் நீர்மின் திட்டம்.

* வினா எண் 513— திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா]

(அ) ஹொகேனக்கல் நீர் மின் திட்டம் பற்றிய நிபுணர் களின் கருத்து அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

* வினா எண் 514— திரு. ஜே. ஜேம்ஸ், திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) ஹொகேனக்கல் மின் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன ?

(ஆ) மத்திய அரசு இத்திட்டத்தை அமுல்படுத்த முன் வந்தது உண்மையா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) & (ஆ) ஹொகேனக்கல் நீர் மின் திட்டம் காவிரி ஆற்றிலிருந்து தமிழ்நாட்டுக்கு இறுதியாகக் கிடைக்கக்கூடிய நீரளவுடன் இணைக்கப்பட்டுள்ளதால் இத்திட்டத்தை இது வரை செயல் படுத்த இயலவில்லை. எனினும், இத்திட்டத்தை காவிரி நீர்ப் பிரச்னையுடன் இணைக்காமல் தனியே நிறைவேற்றுவதற்கான தொழில் நுட்ப சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்வதற்காக சம் பந்தப்பட்ட அதிகாரிகள் கலந்து பேசலாமென்று 23—5—1978 அன்று கர்னாடக மாநிலத்தோடு அமைச்சர்கள் மட்டத்தில் நடந்த பேச்சு வார்த்தையின்போது தீர்மானிக்கப்பட்டது. இதற் கிணங்க, பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.

இப்படி இத்திட்டத்தை காவிரி நீர்ப் பிரச்சினையுடன் இணைக்காமல் தனியே நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறு களை ஆராய வேண்டுமென்று மத்திய அரசும் கேட்டுக் கொண்டுள் ளார்கள்.

1979 மார்ச் 22]

[முற்பகல் 9·30]

திரு. எம். அண்ணாமலை; தலைவரவர்களே, ஒகேனக்கல் நீர் மின் திட்டம் பற்றி நிபுணர்களிடையே கருத்து அறியப்பட வில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். நீண்ட நாள் பேச்சளவிலேயே இருந்து வருகிறது. மின்சாரப் பற்றாக்குறையை பூர்த்தி செய்யும் வகையில் மத்திய அரசும் இந்தத் திட்டம் குறித்து ஏற்றுக்கொண்டு ஒப்புதல் அளிப்பதாக வும் அறியப்படுகிறது. ஆகவே, இதனைக் கருத்தில் கொண்டு விரைவிலே இந்தத் திட்டத்தை அமல்படுத்த அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; பேரவைத் தலைவ ரவர்களே, காவிரிப் பள்ளத்தாக்கில் மின் திறனை பயன்படுத்தும் பொருட்டு தர்மபுரி மாவட்டத்தில் ஒகேனக்கல் அருகாமையில் ஆண்டொன்றுக்கு 800 மெகாவாட் மின் உற்பத்தியை உண் டாக்கும் ஒகேனக்கல் நீர் மின் திட்டம் உருவாக்கப்பட்டது. இந்தத் திட்டம் 1964-லே தயாரிக்கப்பட்டு மத்திய அரசி னுடைய நீர் மின் குழுவுக்கு பரிசீலனைக்கு அனுப்பி வைக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பிரச்சனை இரண்டு மாநிலங்களுக் கிடையே இருக்கக்கூடிய பிரச்னையாக இருப்பதாலும், காவிரி நீர்ப் பிரச்னை இன்னும் தீர்க்கப்படாமல் இருப்பதாலும், இதனைக் காவிரி நீர்ப் பிரச்சனையிலிருந்து தனியே எடுத்துக் கொள்ளலாமா என்பது பற்றி அரசு ஆராய்ந்து வருகிறது. ஆகவே, திட்டவட்டமான முடிவு இதுவரையிலும் ஏற்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா; தலைவரவர்களே, அண்மையில் மத்திய மின்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.ப. ராமச்சந்திரன் அவர்கள் தமிழகத்தில் சில புதிய மின் திட்டங்களை உருவாக்க இருப்பதாக அறிவித்தார்கள். இந்த ஒகேனக்கல் நீர் மின் திட்டமும் அதிலே அடங்கியுள்ளது என்று அறிகிறேன். திட்டத்திற்கான மதிப்பீடு எவ்வளவு? இது ஆராயப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் இங்கே அறிவித்தார்கள். இது ஆராயப்பட்டு துவங்குவதற்கு எவ்வளவு காலம் பிடிக்கும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; பேரவைத் தலைவ ரவர்களே, மத்திய மின் துறை அமைச்சரவர்கள் தமிழக முதல்வ ருக்கு கடந்த 1—2—1978 அன்று ஒரு கடிதம் அனுப்பி இருக்கிறார் கள் அதிலே ஒகேனக்கல் திட்டத்தை, காவிரி நீர்ப்பிரச்னையில், தமிழ்நாட்டிற்கு கிடைக்கும் உத்தேச நீரின் அளவைக்கொண்டு

மறுபரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். அதற்குப் பின்னாலும் 23–5–1978 அன்று சென்னையில் கர்நாடக மாநில அமைச்சரும் Minister for Information and youth Services) தமிழக அமைச்சர்களும் பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதற்குப் பின்னாலும் 17–8–1978 தமிழக மற்றும் கர்நாடக அதிகாரிகள் கலந்து பேசியிருக்கிறார்கள் ஆகவே, இந்தத் திட்டம் இன்று பரிசீலனையில் இருந்து வருகிறது. இது எவ்வளவு காலத்தில் முடியும் என்பதைப் பற்றியோ அல்லது அந்தத் திட்டத்தின் மூலமாக எவ்வளவு மின்சாரம் கிடைக்கும் என்பதைப்பற்றியோ திட்டவட்டமாக நாம் எதுவும் சொல்ல முடியாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் கே. சமரசம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒகேனக்கல் மின் திட்டம் பொதுவாக தமிழகத்தில் இருக்கின்ற மின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையிலேயும், தருமபுரி மாவட்டத்திலே ஒரு மின் திட்டம் ஏற்படுத்தப்படுகின்ற வகையிலேயும், கர்நாடகத்திற்கு இருக்கின்ற மின் தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையிலும் தமிழக அரசும், கர்நாடக அரசும் இணைந்து செயல்படக்கூடிய திட்டத்தினைப் பற்றி ஆராயப்பட்டு வருவதாகச் சொல்லப்படுகிறது. இது குறித்து அடுத்த மாதம் இரண்டு முதலமைச்சர்களும் இணைந்து பேசப்போவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, மேலும் விரைவாக இந்தத் திட்டத்தினை உருவாக்க வேண்டிய முயற்சி எடுத்துக்கொள்ளப்படுமா, அவ்வாறு விரைவாக செயல்படுத்த இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு; பேரவைத் தலைவரவர்களே, தமிழக முதல்வரவர்கள் இந்தத் திட்டத்தை எப்படியாவது சீக்கிரமாக முடிக்கவேண்டும் என்றும் இந்தத் திட்டத்தை அமல் படுத்தவேண்டும் என்றும் கர்நாடக முதல்வருடன் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்கள். ஆகவே, தீவிரமான பரிசீலனைக்குப் பின்னாலே சீக்கிரமாக முடிப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீலகிரி மாவட்டத்தில் பால் விற்பனை நிலையங்கள்.

*வினா எண் 515. திரு. போ. கோபாலன்: மாண்புமிகு கிராமத் தொழில்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நீலகிரி மாவட்டத்தில் பால்வள நிறுவனம் நடத்தும் பால் விற்பனை நிலையங்கள் உள்ளனவா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தமிழ்நாடு பால்வள நிறுவனத்தின் பால் விற்பனை நிலையங்கள் நீலகிரி மாவட்டத்தில் ஏதும் இல்லை.

(திரு. சேலம் மு. ஆறுமுகம் அவர்கள் எழுந்திருந்தார்)....